ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு. . .

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை அனுமதித்தல் குறித்து.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order. Can we we introduce the Bill when the matter had gone to Court and the Court is seized of the subject. That is the most important point. Even last time we had mentioned the subject here. The Hon. Minister said that no statutory provision need be made. That assurance was given by the Hon. Minister on the floor of the House. The text of the speech would reveal, that. Later on an executive order was passed according to the wishes of the Hon. Minister for Law. That went to the Court. That was set at nought by the Ordinance. Now the Hon. Chief Minister is trying to regularise the Ordinance by bringing in an enactment. May I know whether it is in order and whether it will not be possible for the Hon. Minister for Law or Hon. Chief Minister to give guidance in this matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இதுபற்றி ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தின்கீழே ஒரு உத்தரவு போடலாம் என்று அரசு செய்தது. அந்த முடிவு ஆந்திர மாநிலத்திலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி மத்திய அரசாங்கமும் அனுமதி அளித்து இருக்கிறது. அதற்கிடையில் அது சரிதானா என்று நீதி மன்றத்திற்குச் சிலர் சென்றார்கள் என்ற செய்தியை நான் லண்டனில் இருந்தபோது பத்திரிக்கையில் படித்தேன். உடனடியாக முதல்வர் அவர்களோடு தொடர்பு கொண்டு, நீதி மன்றத்திலே இது